**சுற்றறிக்கை – 04/2023**

**உள்ளூராட்சி மன்றங்களின் தரவுகளை E – தரவுத்தளத்தில் ( Google Sheet ) பேணுதல். வட மாகாணம்.**

15. வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலுமுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக E – தரவுத்தளத்தினை ( Google Sheet ) 01.01.2024 ஆம் திகதி தொடக்கம் நாளதுவரை இற்றைப்படுத்துதல் வேண்டும்.

ix. பொதுமக்கள் குறைகேள் முறைமை பற்றிய விபரங்கள் – Details of Public grievance mechanism

x. ஆதனவரி அறவீட்டு விபரங்கள் – Details of Assessments tax

xi. மாதாந்த வருமானம் மற்றும் செலவின சுருக்கம் - Monthly Revenue and Expenditure summary

xii. அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினர் விபரம் - Details of Unscheduled Cadre.

xiii. அபிவிருத்தி வேலைத்திட்ட விபரம் - Details of Development Works.

xiv. திண்மக்கழிவு முகாமைத்துவ தகவல்கள் - Data for Solid Waste management.

xv. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட வேலைகள் - LDSP Works.

xvi. இணைந்த சேவை அலுவலர்களின் வேலை நிறைவேற்று அறிக்கை – Combined staff work done Reports

16. ஒவ்வொரு விடயம் சார்ந்த Google Sheet னையும் நாளதுவரை இற்றைப்படுத்துவதற்கு விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் எல்லா உள்ளூராட்சி மன்றங்களிலும், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களிலும் வட மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திலும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

17. ஒவ்வொரு Google Sheet னையும் நாளதுவரை இற்றைப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விபரம் ( பெயர், பதவி, கையடக்க தொலைபேசி இலக்கம் ) குறித்த Google Sheet இன் முதலாவது வரியில் பதிவிடல் வேண்டும்.

18. தரவுகளை இற்றைப்படுத்துவதற்கான பணி குறித்த உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் வழங்கப்பட வேண்டும்.

19. ஒவ்வொரு Google Sheet இற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும் வட மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திலும் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும். இவ் உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்களும் அவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்ட Google Sheet இல் பதிவிடல் வேண்டும்.

20. ஒவ்வொரு Google Sheet க்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மற்றும் வட மாகாண உள்ளூராட்சி திணைக்கள உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு நாளும் விபரங்களை சரிபார்த்தல் வேண்டும்.

21. இந்த Google Sheet இல் தரவுகளை பதிவிடும் செயற்பாடு மாகாணத்திற்கான தரவுகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கான ஒரு செயற்பாடு மட்டுமின்றி உள்ளூராட்சி மன்றமட்டத்தில் பணிகளை காலக்கிரமத்தில் செய்வதனை உறுதிப்படுத்தும் செயற்பாடாகவும் இது உள்ளது.

22. ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் தரவுகள் இற்றைப்படுத்தப்படாமல் இருக்குமாயின் மாகாணத்திற்குரிய தரவினை முழுமையாக பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் உரிய காலத்தில் பணிகளை நிறைவு செய்தல் வேண்டும்.

23. ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களும் இத்தரவுத் தளத்தினை கண்காணித்தல் வேண்டும்.

**ஒப்பம் :-** செ. பிரணவநாதன்.
உள்ளூராட்சி ஆணையாளர்,
வட மாகாணம்.